# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் --09 | 22–03–2004 | திங்கட்கிழமை | ஓசை –033



உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

123,பஜார் வீதி, வவுனியா.

(சி-9260)


# நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டவேளையில்

# அதை மீட்டெடுத்தவர் தலைவர் பிரபாகரன்!

**-அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்**

**எமது விடுதலைப் போராட்டமும், எமது இனமும் நெருக்கடியின் உச்சத்தில் இருந்தபோதுகூட அதிலிருந்து மீட்டெடுத்து சென்றவர் எமது தேசியத் தலைவர். இது வரலாற்றுத் துரோகி கருணாவுக்கும் தெரியும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

வெளிநாட்டில் இருந்து ஒலி பரப்பாகும் தமிழ் வானொலியூடாக புலம்பெயர்ந்துள்ள தமிழீழ நேயர்கள் கருணாவின் துரோகத்தனம் தொடர்பாக கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்;

கருணாவினால் இப்படியான பெரிய துரோகம் ஒன்று இழைக்கப்படும் என நம்பவில்லை. ஏனெனில், தென் தமிழீழத்துக்கு முன்னுரிமை கொடுத்து கௌரவம் கொடுக்க வேண்டும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதில் எமது தலைவர் பெருவிருப்புக் கொண்டிருந்தார். அதேபோன்று கருணாவும் சந்தேகம் கொள்ளும் வகையில் அண்மையில் நடந்து கொள்ளவில்லை.

கருணா தன்னுடைய குற்றங்களை மறைப்பதற்காக மிகவும் திட்டமிட்ட முறையில் நகர்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர், வெளி நாடுகளுக்கு நாங்கள் சென்று வரும்போது தலைவரைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்ததில் இருந்து புரிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வளவு மோசடிகளையும், குற்றங்களையும்செய்து கொண்டு கருணாவால்எப்படிமறைக்கப்பட்டது என்பது எமது போராட்ட வரலாற்றில் இது ஒரு புதிய எதிர் கொள்ளல். இது எமது அமைப்பை மேலும் உறுதியாக வளர்த்துச் செல்வதற்கு கருணாவின் சவால் உறுதியைத் தந்துள்ளது.

மட்டக்களப்பு மண்ணில் பெரும் அழிவுகளுக்கும் காட்டிக் கொடுப்புக்களுக்கும் காரணமாக

(8ஆம் பக்கம் பார்க்க)

# 5ஆயிரத்திற்குமதிகமான வேட்பாளரில் 5பேரே சொத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்

**தேர்தல் திணைக்களம் அறிவிப்பு**

(கொழும்பு)

வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஒழுங்கு முறைக்கு பெருமளவு வேட்பாளர்கள் அமைந்து நடக்கவில்லை என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கட்சிகள் சுயேட்சைக்குழுக்கள் சார்பாக ஐயாயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் நேற்று முன்தினம் வரை ஐந்து வேட்பாளர்கள் மட்டுமே தமது சொத்து விபரங்களை தேர்தல் ஆணையாளருக்கு வெளிப்படுத்தியுள்ளனர். ஏனையோர் விரைவில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## -வடமராட்சிக் கடலில் அத்துமீறும்-

# நீர்கொழும்பு மீனவர்கள் குறித்து வடமராட்சி மீனவர் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்தலில் தற்போது நீர்கொழும்பு மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதனால் உள்ளூர் மீனவர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள வேளை நீர்கொழும்பு மீனவர்களும் மீன்பிடியில் ஈடுபட ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் உள்ளூர் மீனவர்களின் 6ற்கும் மேற்பட்ட வலைகளை நீர்கொழும்பு மீனவரின் மீன்பிடிப் படகுகள் அறுத்துச் சென்றுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# ஐ.தே.மு. ஆட்சிப்பீடம் ஏறினால் புலிகளுடன் உடன் பேச்சை ஆரம்பிப்போம்

**தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர்**

(கொழும்பு)

இம்முறை நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிப்பீடம் ஏறினால் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை ஏப்ரல் மாதத்தில் உடனடியாக ஆரம்பிப்போம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாத்தளையில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

வட கிழக்கிற்கு சமஷ்டி ஆட்சி சபை முறையை விடுதலைப்புலிகள் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளனர். இவைகளை மீண்டும் நாங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாக உள்ளோம் இன்னும் இரண்டு வருடங்களில் வடகிழக்கில் ஏற்பட்டுள்ள இனப்பிரச் சினையை கட்டாயமாகத் தீர்த்துவைப்போம் என பிரதமர் கூறியுள்ளார்.

## -திருகோணமலை சம்பூரில்-

# புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட முப்பத்தைந்து சிறுவர்கள் ஒப்படைப்பு

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட சம்பூர் அரசியல்துறை செயலகத்தில் வைத்துபதினெட்டு வயதுக்குட்பட்ட 35 பேரை நேற்றுக் காலை யுனிசெவ் அதிகாரிகளிடம் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஒப்படைத்தனர். அந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் தியாகராஜா, சமாதானச் செயலகத்தைச் சேர்ந்தவன் மற்றும் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோரும், யுனிசெவ் தரப்பில் செயற்றிட்ட இணைப்பாளர் டாக்டர் ஜாஸ்மின் ரேக், யுனிசெவ் திருமலைப் பிரதிநிதி கபிரிவெல்லா எல்ரோய் மற்றும் யுனிசெவ் கொழும்பைச் சேர்ந்த கிறிஸ்ரினா வால்ட்சின்ஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

# வாக்களிப்பு நிலையத்தில் வன்முறையை கட்டுப்படுத்த பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம்

**-சனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய**

(கொழும்பு)

ஏதாவதொரு வாக்களிப்பு நிலையத்தில் வன்முறை தீவிரமானால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த பொலிசாருக்கு பொலிஸ்மா அதிபர் அனுமதியளிக்க அதிகாரம் இருப்பதாக சனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புக்கருதி மேற்படி பொலிசாரின்உத்தரவைதேர்தல் ஆணையாளரின் உத்தரவாக ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பொலிசார் ஒருவர் எந்த அரசியல் வாதியினதும் தலையீட்டுடன் கட்சி சார்பில் நடந்து கொள்வது ஆதார பூர்வமாக நிருபிக்கப்பட்டால் அவர் மீதுசட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பதவியிலிருந்து நீக்க பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க கண்காணிப்பு அமைப்பு ஐ.தே.முன்னணியை ஆதரிக்கிறது!

**ஐ.ம.சு.முன்னணி குற்றச்சாட்டு**

(லண்டன்)

பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு அமெரிக்கா, கனடா, ஜப்பான் ஆகியநாடுகள் நிதி உதவி செய்வதாக சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.தே. முன்னணிக்கு ஆதரவாகச் செயற்படும் தேர்தல் கண்காணிப்புஅமைப்பிற்கு அதிகநிதி உதவி செய்வதன் மூலம் ஐ.தே. முன்னணிக்கு இந்த வெளி நாடுகள் உதவுவதாகவும் ஐ.ம.சு. முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தலைக் கண்காணிக்கத் தேவையான நிதியைவிட பத்து மடங்கு அதிகமான நிதியை இந்த நாடுகள் தேர்தலைக் கண்காணிக்கவுள்ள அமெரிக்கா தலைமையிலான அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு, வழங்கியுள்ளதாகவும் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

நிதியுதவி சம்பந்தமான இச் சந்தேகங்கள் என்னவென ஐ.ம.சு.முன்னணியின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர். பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

85மில்லியன் ரூபாவை தேர்தல் கண்காணிப்புக்களுக்கென பப்ரல், பி.என்.இ.பி என்ற இரு அமைப்புக்களோடு தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள அமெரிக்காவின் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கும் இந்த நிதி உதவி செய்யப்பட்டுள்ளது

ஆனால், ஏன் இம்முறை, இவ்வாறு தொகை தேவையென்ற கேள்வி எமது ஆதரவாளர்கள் அங்கத்தவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. கண்காணிப்பு வேலைகளுக்கு மட்டும் பணம் தேவையென்றால் 85 மில்லியனில் நூற்றுக்கு 10 சதவீதம் பெரும்பாலும் இலங்கையிலுள்ள வாழ்க்கைத்தரத்தை பார்க்கும் போது போதியளவாக அமையும் என்பது பலரின் கருத்து. இச்சூழ் நிலையில் ஏன் இந்த வெளி நாடுகள் பாரிய தொகையை திடீரென ஏனைய எந்தவோர் கட்சிகளுடனும் கலந்தாலோசிக்காமல் நேரடியாக வழங்கப்பட்டுள்ளதென்பது கேள்விக்குறியாகவுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# கிளி. மாவட்ட மருத்துவர் சங்கம்; சிறப்புற நடந்த அங்குரார்ப்பண நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று 1-9 தங்கக மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் நீண்ட காலமாக மருத்துவ சேவை புரிந்துவரும் வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்கள் கிளி. மருத்துவர் சங்கத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை மருத்துவர் யூடி றமேஸ் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்கள், விருந்தினர்கள் உள்ளிட்ட அனைவரும் ஏ-9 வீதியில் இருந்து மங்கல வாத்தியங்களின் இசை முழங்க சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பொதுச் சுடரினை மருத்துவ பீட விரிவுரையாளரும், மருத்துவருமாகிய திருமதி ஜெ.கணேசமூர்த்தி, வைத்திய கலாநிதி கெங்காதரன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், வைத்திய கலாநிதி திருமதி கரிகாலன் பத்மலோஜினி ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து வரவேற்புரையினை வைத்திய கலாநிதி பிறைட்டன் நிகழ்த்தினார். சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், வைத்திய கலாநிதி திருமதி கரிகாலன் பத்மலோஜினி ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து உரைகளை தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் அருண், வைத்திய கலாநிதி கெங்காதரன், குழந்தை மருத்துவ நிபுணராக யாழ். மருத்துவமனையில் பணியாற்றும் ஏ.ஜெ. மோறல் ஆகியோர் நிகழ்த்தினார். கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் மருத்துவத்துறை எதிர்கொண்ட சவால்கள் தொடர்பாக வைத்திய கலாநிதி சுதாகரன், வைத்திய கலாநிதி சிவபாலன், மருத்துவ பீட விரிவுரையாளர் திருமதி கணேசமூர்த்தி, இலங்கை மருத்துவ சங்க இணைப்பாளர் ரவீந்திரன் ஆகியோர் ஆற்றினர்.


அடுத்து வைத்தியத் துறையில் நீண்ட காலம் பணியாற்றிய வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களின் சேவையைப் பாராட்டி கிளி. மருத்துவ சங்கத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. விருதினை மருத்துவ பீட விரிவுரையாளரும், மருத்துவத் துறையில் நீண்ட காலம் பணியாற்றி வருபவருமாகிய வைத் திய கலாநிதி திருமதி கணேச மூர்த்தி வழங்கினார். இதனைத் தொடர்ந்து புற்றுநோய் பற்றிய விரிவுரைகள் இடம்பெற்றது.

நிகழ்வினை அடுத்து கிளி. மாவட்ட மருத்துவ சங்க நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் மேற்படி சங்கத் தலைவராக மருத்துவர் பிறைட்டன், செயலாளராக மருத்துவர் யூடிறமேஸ், பொருளாளராக பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன் பத்துக்கும் மேற்பட் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து நன்றி உரையைமருத்துவர் சிவராஜா நிகழ்த்தினார்.

இந்நிகழ்வினை மருத்துவ கலாநிதிகள், மருத்துவர்கள், மருத்துவ பீட மாணவர்கள், மருத்துவத்துறை சார்ந்தவர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வு நிறைவு பெற்றதும் கிளி. மாவட்ட மருத்துவமனை அழிக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத்தூபி திறக்கப்பட்டு அதனை வடிவமைத்த சிற்பி இளங்கோ மாஸ்ரருக்கு மருத்துவர் பேராணந்தராஜா நினைவுப் பரிசினை வழங்கினார்.

(லோ, பி)



அங்குரார்ப்பண நிகழ்வு

# கிளி.யில் உருவாக்கப்படும் மருத்துவர் சங்கம் இலக்கையடைய புலிகளின் முழு ஒத்துழைப்பு உண்டு

## அங்குரார்ப்பண நிகழ்வில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

***கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கப்படுகின்ற மருத்துவ சங்கமானது பாதிக்கப்பட்டு சரியான மருத்துவ வசதிகளை பெறமுடியாதுள்ள எமது மக்களுக்கான சரியான சேவையைச் செய்து எதிர்பார்க்கின்ற இலக்கை அடைவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளாகிய எமது ஒத்துழைப்பு என்றும் கிடைக்கும். இவ்வாறு தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்துள்ளார்.***

நேற்றுக்காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி 1-9 தங்கக மண்டபத்தில் நடைபெற்ற கிளி.மாவட்ட மருத்துவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கிளிநொச்சி மருத்துவ சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்வதன் மூலம் இன்றைய காலத்தின் பெரும் தேவையை நிவர்த்தி செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம். ஏனெனில் கடந்த காலங்களில் இந்தப்பிரதேசங்கள் எத்தகைய மருத்துவவசதிகளுமின்றி மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் இல்லாதிருந்த யுத்த காலத்தில் மக்கள் பெரும் துயரங்களைச் சந்தித்திருந்தனர்.

அன்றைய காலப் பகுதியை நாம் எண்ணும் போது இன்றைய இந்நிகழ்வு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றே. ஏனெனில் இன்று ஒரு சமாதான சூழல் தோன்றி யுத்தம் நிறுத்தப்பட்டு ஓரளவேனும் எமது மக்களின் தேவைகளை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் மக்களின் நலன் மீது அக்கறை கொண்டு பல வைத்திய கலாநிதிகள் இங்கு பணியாற்ற முன்வந்திருப்பதனை நாங்கள் மனமகிழ்வுடன் பார்க்கின்றோம்.

யுத்தம் எங்கள் மீது திணிக்கப்பட்ட போது எதுவிதமான மருத்துவ வசதிகளும் இன்றி எங்கள் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தார்கள்.

அன்றைய காலப்பகுதியிலே தேவைப்பட்ட அனைத்து வசதிகளையும் எம்மால் நிவர்த்தி செய்ய முடியாவிட்டாலும். எமது வைத்திய கலாநிதிகள், மருத்துவ போராளிகள் எல்லோரும் போர்முனையிலே எமது வீரர்களுக்கு மருத்துவப்பணிகளைச் செய்தும் சிகிச்சைகளை அளித்த நிலையிலும் தமக்குக் கிடைக்கின்ற நேரத்தை மக்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் கழித்தார்கள்.

இரவுபகல் என்று பாராது எதிரியின் பல்வேறு அனர்த்தங்களுக்கு உட்பட்ட மக்களை குண்டுகள் துளைத்தும், செல்கள் துளைத்தும் எதிரியினுடைய சித்திரைவதைகளால் சின்னாபின்னமாகிப்போயும் இருந்த இந்தத் தேசத்தில் அவர்களின் அன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத துயரமான காலப்பகுதியாகவே அன்றைய காலப்பகுதி இருந்தது.

அன்றைய சூழலில் குறிக்கப்பட்டளவு வைத்தியநிபுணர்களும், வைத்திய கலாநிதிகளும் இரவு பகல் பாராது இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் பணி ஆற்றி வந்தார்கள். அன்றைய தேவையை உணர்ந்தும் இன்றைய தேவைகளைக் கருத்திற் கொண்டும் மக்களுக்கு ஆற்றும் ஒவ்வொரு முயற்சிக்கும் நாம் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் கூறக்கடமைப்பட்டிருக்கின்றோம்.

எமது மக்கள் மீது சுமத்தப்பட்ட இந்த அவலத்தை நீக்குவதற்காக எமது தேசியத்தலைவர் அவர்கள் மருத்துவப்போராளிகளை தயார் படுத்தி பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு சேவை செய்ய தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையை ஆரம்பித்தார்.

கிளி.,முல்லை மாவட்டங்களில் நோய்களின் தாக்கம் அதிகமாக இருக்கின்ற போதும் அதற்கான சிகிச்சைகளைப் பெறுவதற்கு மிகுந்த சிரமமேற்பட்டது. ஒரே மாவட்டத்திலேயே பலதடவைகள் இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். காடுகள், மேடுகள் எங்கும் எமது மக்கள் வாழ்ந்தார்கள். அதனால் விஷஜந்துக்களின் தாக்கங்களுக்குட்பட்டு பல இறப்புக்களைச் சந்தித்தார்கள். இந்த நிலையில் எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக களமுனைகளில் நின்ற மருத்துவப்போராளிகளை எடுத்து குறித்த பிரதேசங்களில் மருத்துவப்பணிகளை மேற்கொள்வதற்காக பயிற்று வித்து அனுப்பியிருந்தார் எங்க எது தலைவர். இதனால் அந்த மக்கள் பெரும் நன்மை அடைந்தார்கள்.

இந்த நிலையில் இன்று கிளி மருத்துவ சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்ற நிகழ்வானது உண்மையாக எமது மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்படுத்துகின்ற ஒருபெரும் நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். இன்று எமது தேசத்தின் தேவைகளை நாம் அனைவரும் மனதில் கொண்டு எங்கள் தேச மக்களின் நலனுக்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதனையும் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

இன்று உருவாக்கப்படுகின்ற இந்தச்சங்கம் எதிர்பார்க்கின்ற இலக்கினை எட்டி எமது மக்களுக்கு நல்ல சேவையைப் புரிந்து மக்களைக் காத்து நல்லதோர் பெரும்பணியை ஆற்ற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் இதன் எதிர்பார்ப்பை நிறைவேற்றக் கூடிய வகையிலே மருத்துவர்கள், மருத்துவக்கலாநிதிகள் எடுக்கின்ற எந்த முயற்சிக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளாகிய நாம் என்றும் பக்கத் துணையாக நிற்போம் எனவும் தெரிவித்தார். (லோ,பி)


அங்குரார்ப்பண நிகழ்வில் விருந்தினர்கள் மங்கல இசையுடன் அழைத்துவரப்படுகின்றனர்.



வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களை வைத்தியகலாநிதி திருமதி கணேசமூர்த்தி கௌரவிக்கின்றார்.


## வரிவிளம்பரம்

### அமல் பல் மூக்குக்கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து நவீன பிறேங்களில் கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.தொடர்புக்கு: அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம் பரந்தன்சாலை புதுக்குடியிருப்பு. (4058)

### கொடுப்பனவு வழங்கல்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களது சேவை முடிவுறுத்தல் கொடுப்பனவு எதிர்வரும்24,25/03/2004. திகதிகளில். வழங்கப்படும்வேலைமுகாமையாளர்திரு.சிவபாதசுந்தரம் நிர்வாக அதிகாரி-திரு.ஜெகநாதன். (4331)


# புளியங்குளம் – நெடுங்கேணி வீதி இருமருங்கிலுமுள்ள பற்றைகளால் சிரமம்

புளியங்குளம்-நெடுங்கேணி பிரதான வீதியின் இருமருங்கிலுமுள்ள பற்றைக்காடுகள் அழிக்கப்படாதுள்ளமையின் காரணமாக வாகன ஓட்டிகள் இவ்வீதியில் தினம் தினம் பெரும் அச்சத்துடனேயே வாகனங்களைச் செலுத்தவேண்டியுள்ளதாக வாகனசாரதிகள் கவலை தெரிவித்துள்ளனர். வீதியின் இருமருங்கும் உள்ள பற்றைக்காடுகளினால் எதிரே என்ன வாகனம் செல்கின்றதென்றோ அல்லது வருகின்றதென்பதோ தெரியாத நிலையில் அவ்விடங்களில் பாரிய வாகன விபத்துக்கள் இடம்பெறக்கூடியவையாக இப்பற்றைகள் அமைந்துள்ளது.

எனவே குறித்த இப்பகுதிகளிலுள்ள பற்றைக்காடுகளையாவது அகற்றி வாகன விபத்துக்கள் ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் முன்வரமாட்டார்களாவென வாகன ஓட்டிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர். (சோ)


கிளி. மருத்துவமனையின் யுத்தகால அழிவை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி.

# ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளை அகற்ற உலக நாடுகள் பலவற்றில் ஆர்ப்பாட்டம்

## - கோடிக்கணக்கில் மக்கள் பங்கேற்பு

**ஈராக்மீது அமெரிக்காவின் தலைமையிலான கூட்டுப்படைகள் போர்தொடுத்து ஒருவருட நிறைவை முன்னிட்டு ஈராக்கைவிட்டு அமெரிக்கப்படைகளை வெளியேறுமாறு கோரி உலகின் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கோடிக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.**




அமெரிக்கப்படைகளை மீளப்பெறுமாறு கோரி அமெரிக்காவின் மன்ஹட்டன் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள்.

ஈராக்மீது அமெரிக்காவின் கூட்டுப்படைகள் போர் தொடுத்து நேற்று முன்தினத்துடன் ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றுள்ளன.

இதன்போது அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்மீதான அமெரிக்காவின் போரில் பங்குபற்றிய ஸ்பெயின், பிரித்தானியா, இத்தாலி போன்ற நாடுகளிலும் மற்றும் தாய்லாந்து, கொங்கொங், இந்தியா போன்ற நாடுகளிலும் இப்பேரணிகள் நடைபெற்றுள்ளன.


இதேவேளை, ஈராக்மீது அமெரிக்கா போர்தொடுப்பதற்கு சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் எடுத்த தீர்மானம் தவறானது என்றும் ஜப்பானிலும், அமெரிக்காவிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

இதேவேளை அமெரிக்காவின் மன்ஹட்டான் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 30 ஆயிரம் பேர் திரண்டனர். பின்னர் அது 1லட்சமாக அதிகரித்தது. அங்கு உரையாற்றிய மதகுரு ஹெர்பட் எமது பிள்ளைகளை மீள அழைப்பதற்கு நேரம் இது என்றும், ஈராக் போர் தேவையற்ற ஒன்று என்றும் குறிப்பிட்டார். அங்கு அமைதி ஆர்ப்பாட்டம் நடத்தியோர் ஈராக்கில் பலியான 560 பேரின் காலணிகளை வெள்ளை மாளிகையின் படிகளில் வைத்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஈராக்கில் 11 மாதங்களாக கடமையாற்றும் மார்க் மக்வையரின் 5வயது புதல்வனும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு தந்தை வீடு வர வேண்டும் என கோஷமிட்டார்.

## கொள்வனவு

பிரிட்டனிடம் இருந்து ஜெற் பயிற்சி விமானங்களை இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது.

இந்திய விமானப்படைக்குத் தேவையான அறுபத்தியாறு அதிநவீன 115 என்னும் பயிற்சி ஜெற் விமானங்களை கொள்வனவு செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.




அமெரிக்கா தலைமையிலான ஈராக் போரிற்கு எதிராக லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக லண்டனிலுள்ள 'பிக்பென்' மணிக்கூட்டுக் கோபுரத்தின் மீது ஏறிய கிறீன்பீஸ் அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் போர் மீதான வெறுப்பைக்காட்டும் பதாகைகளை ஏந்தியுள்ளனர்.

# ஈராக்கில் நேசப்படைகளை தக்கவைக்க புஷ் தீவிர முயற்சி

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஸ்பெயின் போலந்து போன்ற நேசநாடுகளை ஈராக்கில் இருந்து படைகளைத்திருப்பி எடுக்க வேண்டாமென்று கேட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷின் வேண்டுகோளை ஸ்பெயினின் புதிய சனாதிபதி சப்பெற்றோ தொடர்ந்து நிராகரித்து வருதோடு ஸ்பெயினின் படைகளை ஈராக்கில் இருந்துவிரைவில் அழைக்க இருப்பதாகவும் அவர் கூறிவருகிறார்.

ஸ்பெயினின் மற்றிட்டில் நடந்த தொடர் ரயில் குண்டுத்தாக்குதலில் இருநூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்து ஐந்நூறுபேர் படுகாயமடைந்த தாக்குதல் நடந்து இரு நாட்களின் பின்னர் நடந்த தேர்தலின் போது சப்பெற்றோ புதிய சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை தெரிந்ததே.

# தாய்வான் சனாதிபதி தேர்தலில் மோசடி முடிவுகளை நிறுத்த மேல்நீதிமன்றம் பணிப்பு

(தாய்பேய்)

தாய்வானில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்துமாறு அந்நாட்டு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தாய்வானில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் தற்போதைய சனாதிபதி சென்சுயிலியான் வெற்றி பெற்றுள்ளார்.

இதேவேளை வெற்றியீட்டிய சென்சுயிலியான் கடந்த சனிக்கிழமை இவர் பிரச்சாரக்கூட்டமொன்றில் வைத்து துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வயிற்றில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது வெற்றியீட்டிய போதிலும் அவருக்கு சுமார் 29 ஆயிரம் வாக்குகளே அதிகபடியாகக் கிடைத்திருந்தன.

இந்நிலையில் தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகளையும், ஆவணங்களையும் சீல் வைக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டதாகக் கூறப்படுகின்றது.

சனாதிபதித் தேர்தலில் போட்டி இட்டு தோல்வியடைந்த எதிர்க்கட்சி வேட்பாளர் வாக்குகளை மீண்டும் எண்ணவேண்டுமெனக் கோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததை அடுத்தே இந்த உத்தரவை மேல்நீதிமன்றம் பிறப்பித்தது.

இதேவேளை மூன்று இலட்சத்து 37ஆயிரத்து 297 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளமையால் வாக்குகள் எண்ணப்பட்டதில் குழறுபடிகள் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்திருப்பதாகவும் எதிர்க்கட்சி வேட்பாளரான லியேன் சியான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வாக்குப் பெட்டிகளை மட்டுமல்லாது தேர்தலுடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும் சீல் வைக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால் வாக்குகள் மீள எண்ணப்படுமா என்பது பற்றி மேல் நீதிமன்றம் எந்த தகவலையும் வெளியிடவில்லை.



**பெங்களூரில் வீதிப்போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தும் பொலிசார் கடமையாற்றும் சுற்று வளைவில் காங்கிரஸ் கட்சியின் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.**

# பாகிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கைகளில் நூற்றுக்கணக்கான சந்தேக நபர்கள் கைது!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லைப் பிரதேசத்தில் மேற்கொண்டுவந்த தேடுதல் நடவடிக்கை மூலம் நூற்றிற்கும் மேற்பட்ட சந்தேகத்திற்குரிய தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட இந்தத் தீவிரவாதிகளில் அல்-ஹைறதா இயக்கத்தின் இரண்டாவது தளபதியான ஜமான் அல் ஜபாகிரியும் அடங்குகின்றாரா எனக் கூறிமுடியாதென பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் தீவிரவாதிகளைப் பாதுகாத்ததாகக் கூறப்படும் உஸ்பெஸ்கிஸ்தான் அல்லது செச்சினியாவைச் சேர்ந்த தீவிரவாதத் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான் படையினரின் நடவடிக்கையில் கைதான அல்-ஹைறதா சந்தேகநபர்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் இடம்பெற்று வந்த மோதல்களை அடுத்து கடந்த சனிக்கிழமை முதல்பாகிஸ்தான் இராணுவத் தினர் தீவிர தேடுதலை நடத்திவந்தனர் எனவும் இதில் ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் இராணுவத்தினர் ஈடுபட்டு வந்ததாகவும் இதன் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் சில தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த நடவடிக்கை நேற்றும் தொடர்வதாக அறிவிக்கப்படுகின்றது.

# பாகிஸ்தான் மிகப்பெரும் தோழமை நாடு: அமெரிக்க நிலைப்பாட்டால் இந்தியா ஏமாற்றம்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு நேட்டோ அமைப்பு சாராத மிகப் பெரிய தோழமைநாடு எனும் அந்தஸ்த்தை அளிக்கும் முடிவை அமெரிக்கா தம்முடன் பகிர்ந்து கொள்ளாதது குறித்து, இந்தியா ஏமாற்றம் அடைந்துள்ளது.

இந்தியா-அமெரிக்க உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை இது ஏற்படுத்தக் கூடும் என்று இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

இந்த முடிவை இஸ்லாமாபாத்தில் அறிவிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொலின்பவல் இந்தியாவில் இருந்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய -அமெரிக்க கூட்டு பற்றி முக்கியத்துவம் அளித்துப் பேசிய கொலின்பவல், அமெரிக்க அரசின் இந்த முடிவு குறித்து எதுவுமே குறிப்பிடவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நேட்டோ அமைப்பு சாராத மிகப் பெரிய தோழமை நாடு எனும் அந்தஸ்த்தை பாகிஸ்தானுக்கு அளிக்கும் அமெரிக்காவின் முடிவு குறித்த தகவல்களில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கு இந்தியா ஏமாற்றம் அடைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# குஜராத்தில் பா.ஜ.க.வின் ரதயாத்திரைக்குத் தடை!

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் நரேந்திரமோடியின் ரதயாத்திரையைத் தேர்தல் ஆணையகம் தடைசெய்திருப்பதையடுத்து, இம் மாநிலத்தில் பாரதிய சனதா கட்சிக்கும் பெரும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை தொடங்கிய யாத்திரை 80 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நர்மதா மாவட்டத்தைச் சென்றடைவதாக இருந்தது. தேர்தல் ஆணையத்தின் தடையை அடுத்து, யாத்திரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனினும் தேர்தல் முடியும் வரை யாத்திரை நடத்த முடியாமலும் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தேர்தல் விதியை மீறியே யாத்திரை நடத்தப்படுவதாக காங்கிரஸ் தேர்தல் ஆணையகத்திடம் முறையிட்டதையடுத்தே தடைசெய்யப்பட்டுள்ளது.


# "இவர்களும் ஒன்று அவர்களும் ஒன்று இந்தமுறை யாருக்கு ஆதரவு அளிப்பது..."

இரு பிரதான கட்சிகள் மீதும் வெறுப்படைந்து ஜே.வி.பி.க்கு ஆதரவளித்த மக்களின் நிலை இன்று மாறுபட்டுக் காணப்படுகின்றது. 1999முதல் 2001 வரை நடைபெற்ற தேர்தல்களில் கணிசமானோர் ஜே.வி.பி.க்கு சற்று அதிகமாக ஆதரவளித்தது மேற்படி பிரதான கட்சிகள் மீதும் அடைந்த வெறுப்பினாலேயே. அக்கட்சிக்கு அன்று வாக்களித்தோரின் எண்ணிக்கை 8,15,353 ஆகும். அக்கட்சிக்கு அவ்வாறான ஆதரவு கிடைத்தமை அது இரு பிரதான கட்சிகளான ஐ.தே.க., சிறில.சு.க.இரண்டையும் அந்நேரத்தில் பிரச்சாரமேடைகளில் தாக்கிப் பேசி தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை உயர்த்தி அறிவித்ததன் காரணமாகவே. அது புதிய வாக்குறுதிகளை வழங்கவில்லை. கொடுத்த வாக்குறுதிகளில் மாறவுமில்லை. அதாவது அக்கட்சி 1998 ஆம் ஆண்டு விருப்பு வாக்குகளுக்கு போட்டியிடப்போவதில்லை எனக் கூறியது. அதை செயலிலும் காட்டியது.

ஆனால், ஐ.தே.கட்சியோ, சிறில. சு.கட்சியோ தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவர்கள் வாக்குறுதிகளை மீறாத வரலாறே கிடையாது. அதனை நிரூபித்தால் ஜே.வி.பி. அரசியலில் இருந்து விலகுவதாகவும் அன்று பிரச்சாரங்களில் தெரிவித்தது. அத்துடன் அதன் உறுப்பினர்கள் கூட்டங்களில் தெரிவித்ததாவது இரு பிரதான கட்சிகளினாலும் உதிரிக்கட்சியாகவோ முட்டுக் கொடுக்கும் கட்சியாகவோ, தமது கட்சி நடந்துகொள்ளாது என்றும் தெரிவித்துள்ளது. ரோகண விஜேவீர தமது உயிரைத் தியாகம் செய்து வளர்த்த கட்சியாருக்கும் வால் பிடிக்கச் செல்லாது எனவும் விமல் வீரவன்ச போன்றோர் கூறினர். அதுமட்டுமன்றி பட்டிவீரக்கோன், அதாவுட செனவிரத்ன போன்றோர் சந்திரிகாவின் சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு றோஸ்மீட் இல்லத்தில் பானை பிடித்தும் திரிகின்றனர். அந்த பழைய இடது சாரிக் கட்சியினால் வேலையில்லை என்றெல்லாம் ஜே.வி.பி.அன்று கூறியது. அதுமட்டுமன்றி 1997ஆம் ஆண்டு ஏனைய கட்சிகளை விருப்புவாக்குகளை கேட்காமல் தேர்தலுக்கு முகம் கொடுக்குமாறு பகிரங்கமாக சவால்விடுத்தது. சிஹல உறுமய போன்ற கட்சிகள் விருப்புவாக்குகளை கேட்காமல் விடுவதாகக் கூறினாலும் அவற்றின் வேடம் பின்னர் கலைக்கப்பட்டு விட்டது என ஜே.வி.பி.பிரச்சாரம் செய்தது.

முன்பு ஆட்சியினை தீர்மானிப்பது லங்கா சமசமாஜக்கட்சியாகவோ கம்யூனிஸ்ட் கட்சியாகவோ இருக்கும். அதன் பின்பு தொண்டமானின் கட்சிக்கு அது மறியது. அவ்வாறு ஆதரவளித்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று அவை சுகபோகங்களை அனுபவித்தன.

ஆனால் ஜே.வி.பி ஆதரவளித்தாலும் பதவிக்கோ, சுகபோக வாழ்வுக்கோ ஆசைப்படவில்லை என்று நிருபித்துள்ளதாக அக்கட்சி கடந்த காலங்களில் புளுகியது.



அதனைவிட தற்போது அதன் புதிய பிரச்சாரமாவது அரச ஊடகங்கள் தேவையற்ற வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன என்றும் இதனை தடுக்கவேண்டும் எனவும் கூறப்படுகிறது. 1999லும் இவ்வாறான பிரச்சாரங்கள் மூலமே 8,15,353 வாக்குகளை அது பெற்றது.

அவ்வாறு தன்னை ஒரு சிறந்த பத்தரை மாற்றுத் தங்கம் எனக் கூறிக் கொண்ட ஜே.வி.பி. உதிரிப்பாகக்கட்சியல்ல என்ற நிலையைத் தற்போது கூட்டணி மாற்றி அமைத்துள்ளது. விருப்பு வாக்குகளைக் கோருகின்றது. அரசு அமைப்பதற்கு ஆதரவளிப்பதில்லை என்ற நிலையில் இருந்து சறுக்குகிறது. ஊடகங்களின் செல்வாக்கையும் அது பெறமுயற்சிக்கின்றது.

இவ்வாறு ஜே.வி.பி மாறியுள்ளதால் 8,15,353 வாக்காளர்கள் இப்போது வாக்களிக்கப்போவது யாருக்கு? சிலர் ஜே.வி.பி.யினர் 2001 ஆம் ஆண்டு மோசடி மூலம் அந்தளவு எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றதாகக் கருதலாம். ஆயினும் 2002ம் ஆண்டு 4 லட்சம் வாக்குகள் அதற்கு குறைந்து விட்டிருந்தது. அதற்குக் காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒரே மேடையில் சமாதானத்துக்கு எதிராக குரல் எழுப்பவும் கூட்டணியமைக்கவும் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தொடங்கியதாலேயே. இதுவும் அதன் முன்னைய வாக்குறுதி மீறலாகும்.

ஆக தற்போது என்ன நடக்குமோ?" அவர்களும் ஒன்று இவர்களும் ஒன்று தற்போது பௌத்த பிக்குகளுக்கு ஆதரவளிப்போம் என்பது ஜே.வி.பியை ஆதவளித்த மக்களின் கருத்தாகிவிட்டது. அதிலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. அது பிரதான கட்சிகளுக்கு சவாலாக மாறலாம். புதுக்குரலாகலாம். ஆயினும் அவர்களின் நோக்கம் பாராளுமன்றத்தில் வென்றவர்களை அமைச்சுப்பதவியில் அமர்த்தவோ அரசமைக்கவோ அல்ல.தமது குறைநிறைகள் பாராளுமன்றில் ஒலிக்க வேண்டும் என்பது மட்டுமே இவர்கள் ஆதரவளிப்பதன் நோக்கமாகும். இந்த வாக்காளர்களைக் கவருவதும் சுலபமானதல்ல. கவருவதற்கேற்ற செயற்றிறனும், தொனியும் அவசியமாகும். திட்டமிடல் வேண்டும். 1977ஆம் ஆண்டுக்கு பின்பு அவ்வாறு வாக்காளர்களைக் கவரும் கட்சியாக மகாஜனக்கட்சி இருந்தது. 1993ஆம் ஆண்டு சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இருந்தது. 1999-2001 காலப்பகுதியில் ஜே.வி.பி. இருந்தது.ஆனால் தற்போது மக்களைக் கவருகின்ற ஒரு கட்சியாக இருப்பது ஜாதிக ஹெல உறுமய ஆகும். கவரும் தலைவராக இருப்பவர் உடுவே தம்மாலோக தேரர் ஆவார்.

இவர்கள் மக்களை கவர்வதற்கும், மக்கள் இவர்களைக் கவர்வதற்கும் காலத்துக்குக்காலம் ஊடகங்கள் பெரிதும் பங்காற்றி வந்திருக்கின்றன என்றால் மிகையில்லை.

1983ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் செல்வந்தர்களுக்குமிடையில் ஊடகங்கள் கருத்துமோதலை ஏற்படுத்தின. அதனை மக்கள் முன் எடுத்துச்சென்றது இடதுசாரிக் கட்சிகளே. அப்போதைய இடதுசாரிக்கட்சித் தலைவராக வியஜகுமாரதுங்க இருந்தார். அவர் தலையிட்டு இம் முரண்பாட்டை சமரசம் செய்து வைத்து மக்களால் கவரப்பட்டார். அதுபோன்றே 1993லும் லலித் அத்துலத்முதலியும் கவரப்பட்டார்.

1999ஆம் ஆண்டு முதல் ஊடகங்கள் சம்பிரதாய அரசியல் முறைக்கு எதிராக

**உபுல் ஜோசப் பெர்னாந்து (லங்காதீப)**
**மொழியாக்கம்: வடிவேல்**

முரண்பாட்டை ஏற்படுத்தின. அதனை மக்கள் முன் கொண்டு சென்றவர்கள், ஜே.வி.பியினரே அதன் காரணமாக அக்கட்சி மக்களால் கவரப்பட்டது.

தற்போது அண்மையில் சோம தேரர் மறைவுக்குப்பின் ஊடகங்கள் இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு ஒன்றை உருவாக்கியது. சுருக்கமாக கூறினால் சிங்கள-பௌத்த மத அலைகளை உருவாக்கின. இதன் காரணமாக கவரப்படுவர் உடுவே தம்மாலோகதேரர் ஆவார்.

அதனால் மக்கள் "இன்று நாம் தேரரின் பக்கம்" என்ற அலை மேலோங்கியிருக்கின்றது. இந்த அலைக்கு அகப்படுவது ஐ.தே முன்னணியோ,சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ வல்ல ஜே.வி.பி.யே. அதனாலேயே ஜே.வி.பி ஹெல உறுமயவக்கெதிராக குரல் எழுப்புகிறது. இது சாத்தியமாகுமா என்பது தற்போது கூற முடியாதுள்ளது.

## உள்நாட்டு விவகாரங்களில் தலையிட நாம் நோர்வேயை அழைக்கவில்லை

### -முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராகவே நோர்வேக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு பிரச்சினைகளை உருவாக்குவதற்காக அல்ல.

இவ்வாறு முன்னாள் பிரதமரும் பொதுசன ஐக்கிய முன்னணியின் முக்கிய ஸ்தருமாள ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் தோட்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இன்று இலங்கை ஒரு சுதந்திரமான நாடாகவுள்ளது. எதிர்காலத்திலும் எந்த அந்நிய தலையீடுகளும் இன்றி சுதந்திரமாக இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி நோர்வேயின் உதவிகளை பெற்றதன் மூலம் வடக்கு-கிழக்கில் தனியான அரசு ஒன்றை அமைக்க காரணமாகியுள்ளது.

ஒவ்வொரு இலங்கையரும் தமது வாக்குகளை கட்டாயம் நாடு பிளவுபடுவதை எதிர்ப்போருக்கு அளிக்க வேண்டும்.

ஒல்லாந்தர் போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையை தமது சொந்த இலாபத்திற்காகக் கைப்பற்றினர்.

இந்த வகையில் எமது நாட்டின் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்காகவா நோர்வே தலையீடு செய்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## யாழ். மருத்துவபீட மாணவன் மயங்கி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் நடந்தது. தலைச்சுற்று ஏற்பட்டு மாணவன் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். இதனையடுத்து இவரை சக மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு வைத்திய பரிசோதனை இடம்பெற்றபோது இம்மாணவன் மரணமடைந்துள்ளார். எஸ். சரவணபவன் (வயது-21) எனும் மாணவனே உயிரிழந்தவராவார்.

## விசுவமடுவில் சிறப்புற நடந்த மாவீரர் நினைவு நிகழ்வு

(கண்டாவளை)

வன்னிமாவட்ட சிறப்புத்தளபதி லெப்ரினன்ட் கேணல்.ரவியின் 10ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு விசுவமடுவில் கடந்த புதன்கிழமை வர்த்தகசங்கத்தின் ஆதரவில் மாவீரர் நினைவு மண்டபத்தில் வர்த்தக சங்கத் தலைவர் ஞானம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வையொட்டி மரதன் ஓட்டநிகழ்வு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்கு முன்பாக காலை 6.50 மணிக்கு விசுவமடு காவல்துறைப்பொறுப்பாளர் ரகுராம் ஆரம்பித்து வைத்தார். மரதன் ஓட்டம் விசுவமடுவை வந்து அடைந்ததும் மாவீரர் மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

பொதுச்சுடரினை லெப்ரினன்ட் கேணல்.ரவியின் சகோதரன் கு.கிருபன் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் ஏற்றினார். திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை மாவீரரின் தாயார் ஏற்றினார்.மலர் மாலையை சகோதரி அணிவித்தார். தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

அடுத்து மரதன் ஓட்டத்தில் 1ம் இடத்தைப்பெற்ற ராஜேந்திரன், 2ம் இடத்தைப்பெற்ற சாந்தகுமார்,3ம் இடத்தைப்பெற்ற பேணாட் ஆகியோருக்கு லெப்ரினன்ட் கேணல் ரவியின் நினைவுக் கேடயங்களை ரவியின் தாயாரும் விசுவமடு அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியனும் வழங்கிக் கௌரவித்தனர். (14)

### யாழ். பல்கலைக்கு வேந்தர் நியமனம்

யாழ். பல்கலைக்கழக வேந்தராகப் பேராசிரியர் மயில்வாகனன் சிவசூரிய சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் அடுத்த 15 வருட காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# விவசாய செய்கையில் சில இலகு நடைமுறைகள்

வாழ்வியலின் ஆணிவேராக அமைவது விவசாயம். இவ் விவசாயத்தின் ஆரம்பக்கட்டமாக நிலப்பண்படுத்தலை கூறலாம். ஒரு பயிரை நடுவதற்கு முன்பாகவோ அல்லது விதைப்பதற்கு முன்பாகவோ நிலப்பண்படுத்தல் என்பது அவசியம் ஆகின்றது. இப்பண்படுத்தல் செயன்முறையால் எம்மால் செய்கை பண்ணப்படும் பயிரானது சீரான வளர்ச்சியை பெறுவதுடன் பலவாறான அனுகூலங்களையும் தாவரமானது பெறுகின்றது.

இறுகிய நிலையில் இருக்கின்ற நிலம் பண்படுத்தலூடாக பெயர்க்கப்பட்டு தூர்வையாக்கப்படுகின்றது. இதனால் தாவரத்தின் வளர்ச்சிக்கு தேவையாக உள்ள வளியையும், போசனை பதார்த்தங்களையும் தரையில் இருந்தே பெறுகின்றது. நிலம் பண்படுத்தல் மூலம் தாவரத்தின் வேர்ப்பகுதி இலகுவில் வளியையும் ஏனைய போசனையையும் அகத்துறிஞ்ச முடிகின்றது. இதனால் குறிப்பட்ட காலத்தில் சீரான வளர்ச்சியை தாவரம் பெற்றுக கொள்ளக்கூடியதாக உள்ளது. இதனுடன் நிலப்பண்படுத்தலூடாக தரையில் நீரை உறிஞ்சி உள்ளெடுத்து வைத்து இருக்கின்ற தன்மை அதாவது நீரைப் பிடித்து வைக்கின்ற தன்மை அதிகரிக்கின்றது.

நிலம்பண்படுத்துகின்ற போது தாவரங்களின் வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கின்ற களைகளும், நுண்ணங்கிகளும் அழிக்கப்படுகின்றன. இதனால் தாவரத்தில் இருந்து அதிஉச்ச பயனை விவசாயிகள் பெறமுடிவதுடன் விளைவுப் பொருட்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தையும் குறைக்கலாம். மண்ணில் தமது வாழ்க்கை வட்டத்தை தொடங்கும் குடம்பிகள், கூட்டுப் புழுக்கள் ஆரம்பத்திலே அழிக்கப்படுவதால் தாவரத்திற்கு ஏற்படும் சேதத்தையும் கட்டுப்படுத்தலாம்.

சூழலில் இயற்கையாக கிடைக்கின்ற தாவரவிலங்குக் கழிவுகளை (வைக்கோல், குப்பை கூளங்கள், ஆடுமாடு என்பவற்றின் எச்சங்கள்) பயிர்ச்செய்கை நிலங்களில் இட்டு நிலத்தை பண்படுத்துகின்றபோது இத் தாவர விலங்குக் கழிவுகள் இலகுவாக மண்ணுடன் கலக்கப்படுகின்றது. இவ்வாறான சேதனப் பசளைகளால் குறைந்த செலவில் கூடிய வருமானத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

நிலம் பண்படுத்தலில் பல்வேறு முறைகள் உள்ளன. சாதாரணமாக மண்வெட்டியால் அல்லது கலப்பையால் கொத்தப்படுதல் அல்லது உழப்படுதல் சாதாரண நிலப்பண்படுத்தல் எனப்படுகின்றது. 1ஆவது முறை நிலம் பண்படுத்தப்பட்டபின்னர் 2ஆவது பண்படுத்தலுக்கு இடையில் 7-14நாள் இடைவெளி இருத்தல் வேண்டும். இக்கால இடைவெளிக்குள் பயிர்ச்செய்கை நிலத்தில் உள்ள களைகள் அழிக்கப்படுவதுடன் நிலத்தில் இடப்பட்ட தாவர விலங்குக் கழிவுகள் துரிதமாக உக்குகின்றன.

சிறந்த முறையில் பண்படுத்தப்பட்ட பயிர்ச் செய்கை நிலத்திற்கு இரசாயன உரவகைகளை இடுவதால் நிலங்கள் உவர்த்தன்மை அடைவதுடன் தொடர்ச்சியாக அந் நிலத்தில் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகின்றது. இதனை தடுப்பதற்கு தாவர, விலங்குக்கழிவுகளை (சேதனப் பசளைகள்) பயன்படுத்துவதால் மண்வளத்தை சிறந்த முறையில் பேண முடிகின்றது. விவசாயிகள் பயிர்ச்செய்கை நிலங்களில் தாவர, விலங்குக் கழிவுகளை இடுவதால் பல அனுகூலங்கள் கிடைக்கின்றது.

அனைத்துப்போசனைப்பதார்த்தங்களும் தேவையானஅளவு கிடைக்கும் வகையில் தயாரிக்கப்படுவது தான் கூட்டெருவாகும். இவ்வாறு விவசாயிகள் கூட்டெருவை தயார் செய்யும் போது இயற்கையாக சூழலில் கிடைக்கும் தாவர, விலங்குக் கழிவுகளை பயன்படுத்துகிறோம். இதனால் எமது புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்கலாம். இவை எமக்கு இயற்கையாக கிடைப்பதால் குறைந்த செலவில் கூடுதலான வருமானத்தைப் பெறலாம் கைவசம் எம்மிடம் கூட்டெரு இருப்பதால் தொடர்ச்சியாக விவசாயத்தை மேற்கொள்ளலாம். கூட்டெரு பாவனையால் நல்ல மண்வளத்தையும் உருவாக்கலாம்.

விரைவாக கூட்டெருவை பெறவேண்டுமானால் 10 அடி அகலமும், 15 அடி நீளமும், 2 அடி ஆழமும் கொண்டதாக குழி ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக் குழி சீரான முறையில் வெட்டப்படுவதுடன் மணல் கூடிய தரையில் குழி அமைக்கப்படக் கூடாது. அவ்வாறு அமைத்தால் குழி தூர்ந்து போகக்கூடும். தயார் செய்யப்பட்ட குழியில் குப்பை கூளங்கள், சாம்பல் ஆடு, மாடுகளின் எச்சம் அவற்றின் சலம், வேறு தாவர விலங்குக் கழிவுகளை 6 அங்குலம் தொடக்கம் 9 அங்குலம் வரை படையாக இடப்பட வேண்டும். இதன் மேல் பச்சை சாணத்தையும், சாம்பல், ஆடு, மாடு சலத்தையும் மேற்பரப்பில் பரப்புதல் வேண்டும். இவ்வாறு மாறிமாறி குழி நிரப்புதல் வேண்டும். இதன்போது சலம் அல்லது நீரை ஊற்றி படைகளின் ஈரளிப்பைப் பேணவேண்டும்.

முக்கியமாக குழியின் ஒரு புறத்தில் 2 அடி இடப்பரப்பை விட்டுவிட்டே மிகுதிப்பகுதியில் தாவரவிலங்குக் கழிவுகளால் நிரப்பப்படவேண்டும். இப்படி செய்தால் மீண்டும் மீண்டும் புரட்டுதலுக்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு புரட்டுதலுக்கு இடையில் இரண்டு வாரங்கள் (14நாட்கள்) இருத்தல் வேண்டும். 14 நாட்களுக்கு ஒரு தடவை என மூன்று முறை புரட்டப்படுதல் வேண்டும். 6 வாரத்தில் சிறந்த கூட்டெருவைப் பெறவேண்டுமானால் கூடுதலாக மாட்டுச் சாணத்தை பயன்படுத்தலாம்.

தாழ் நிலங்களிலும், மழைக்காலங்களிலும் குழி முறையில் கூட்டெருவை தயார் செய்வது கடினம். இதற்கு குவியல் முறை சிறந்தது இதற்கும் 6 அங்குலம் தொடக்கம் 9 அங்குலம் வரை படைபடையாக தாவர விலங்கு கழிவுகளை போட்டு மாட்டுச்சாணத்தை மேற்பகுதியில் இடுதல் வேண்டும். கோழிகள் கிளறுவதை தடுப்பதற்கு குவியலைச் சுற்றி வேலி அமைத்தல் நல்லது. இதனால் சேதங்கள் ஏற்படுவதை குறைக்கலாம். குழிமுறை, குவியல் முறை இரண்டிலும் இருந்து சிறந்த வளமுடைய கூட்டெருவை பெறலாம்.

10 அடி அகலமும் 15 அடி நீளமும், 2அடி ஆழமும் கொண்ட குழியில் இருந்து 2 தொன் (2000 kg) கூட்டெருவை பெறலாம். 1ஏக்கர் பயிர்ச்செய்கை நிலத்திற்கு 10 தொன் (10000 kg) கூட்டெரு இடப்படுதல் வேண்டும்.

10 தொன் கூட்டெருவில் இருந்து 52கி.கி நைதரசன் 36 கி.கி பொஸ்பரசும் 52கி.கி பொட்டாசியமும் கிடைக்கிறது.

திண்ம நிலையில் கூட்டெரு தயாரிப்பதைப் போன்று இயற்கையாக எமக்கு கிடைக்கின்ற தாவர விலங்குக் கழிவுகளை கொண்டு திரவ நிலையிலும் சேதனப்பசளைகளை தயாரித்து பயிர்களுக்குத் தெளிக்கலாம். அல்லது பயிரின் அடியில் ஊற்றலாம். இயற்கையில் கிடைக்கின்ற கிளிசிறியா (சீமைக்கிளுவை), அல்லது இப்பிலிப்பில் இலைகளில் இருந்து திரவ சேதனப்பசளையை தயாரித்துக்கொள்ளலாம்.

இரண்டு கிலோ கிளிசிறியா இலைகள் அல்லது இப்பிலிப்பில் இலைகளை ஒரு சாக்கினுள் இட்டு 10 லீற்றர் நீரை ஓர் கொள்கலனில் நிரப்பி அதனுள் இலைகள் நிரப்பிய சாக்கினை அமிழ்த்தி வெளியில் தெரியாதவாறும் மேலெழாவாறும் கல் ஒன்றினை வைத்து கொள்கலனை இறுக்கி மூடிவிட வேண்டும். 15தொடக்கம் 20நாட்கள்வரை கொள்கலனில் ஊறவிட்டபின்னர் சாக்கில் உள்ள திரவம் அனைத்தும் கொள்கலனில் வடியவிட்ட பின்னர் அதனை அகற்றவேண்டும். கொள்கலனில் உள்ள திரவ சேதனப்பசளை 1 பங்குடன் 3 பங்கு நீர் கலந்து பயிர்களுக்குத் தெளிக்க வேண்டும்.

மாட்டுச்சாணம் மூலமும் திரவசேதனப் பசளை தயாரிக்கலாம். இரண்டு லீற்றர் பச்சைச் சாணத்தை சாக்கில் இட்டு இறுக்கமாகக் கட்டியபின்னர் 10 லீற்றர் நீர்க் கொள்ளவுடைய கொள்கலனில் இட்டு கொள்கலனின் மூடியை இறுக்கி மூட வேண்டும். இதில் இரண்டு நாட்களுக்கு ஒருதடவை சாக்கினை மேலும் கீழும் அமிழ்த்தி எடுத்தல் வேண்டும். இவ்வாறு 14 நாட்களுக்கு தொடர்ந்து செய்த பின்பு சாக்கினை எடுத்து திரவ சேதனங்கள் யாவும் கொள்கலனில் வடியவிட்டு 1 பங்கு திரவத்தை 2 பங்கு நீருடன் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம். அல்லது அடியில் ஊற்றலாம். மாட்டுச்சாணம் மூலம் தயாரிக்கின்ற திரவ சேதனப்பசளையிலும் பார்க்க சீமைக்கிளுவை இலைகளில் 6 மடங்கு நைதரசனும் 1.5 மடங்கு பொட்டாசியமும் கிடைக்கின்றது. ஆனால் இரண்டிலும் சமஅளவான பொஸ்பரசும் கிடைக்கின்றது.

இயற்கையாகக் கிடைக்கின்ற தாவர விலங்குக் கழிவுகளைப் பயன்படுத்தி விவசாயிகள் உச்சபயனைப் பெற சேதனப்பசளைகள் ஓர் வரப்பிரசாதமாக அமைவதுடன் மண்வளத்தையும் நல்லமுறையில் பேணமுடிக்கின்றது. இதனூடாக இரசாயன பசளைப்பாவனையைக் குறைத்து சேதனப்பசளையை பாவித்தல் மூலம் நிலம்உவர்த்தன்மை அடைதலைத் தவிர்க்கலாம்.

| வகைகள் | நைதரசன் | பொஸ்பரஸ் | பொட்டாசியம் |
|---|---|---|---|
| மாட்டெரு | 0.60 | 0.15 | 0.45 |
| ஆட்டெரு | 0.95 | 0.25 | 1.00 |
| வைக்கோல் | 0.26 | 0.08 | 7.10 |
| கூட்டெரு | 0.50 | 0.25 | 0.50 |

**சி.ஜெயதீபன்**

-உடத்தலவின படுகொலையில்-

# பொ.ஐ.மு. வினர் தொடர்புபட்டிருப்பது சனாதிபதிக்குத் தெரியாதாம்

கடந்த 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது உடத்தலவினயில் நடந்த படுகொலைகள் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா கண்டியில் முஸ்லிம்களிடம் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டிக்கு சென்ற அவர் பொதுச் சந்தையில் மக்களை சந்தித்து உரையாடியதுடன் பொருட்களையும் கொள்வனவு செய்தார். அப்போது முஸ்லிம் மக்களிடம் அவர் தெரிவித்ததாவது எமது கட்சியினர் யாரும் இக்கொலையுடன் தொடர்பு பட்டிருப்பது பற்றி தனக்கு தெரியாது எனக்கூறினார். இந்த நாட்டின் தலைவி என்ற வகையில் தான் இது தொடர்பில் கவலையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்திப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி வேட்பாளர் ராவுப் ஹாஜியாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

-கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான-

# விளையாட்டுப் போட்டியில் முல்லைத்தீவு ம.வி. முதலிடம்

கடந்த செவ்வாய்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கரைதுறைப்பற்று கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் முதலாமிடத்தைத் தட்டிக் கொண்டது.

கோட்டக்கல்வி அதிகாரி நா.தியாகராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை முள்ளியவளை தமிழ் வித்தியாலய அதிபரும் அளம்பில் றோ.க.வித்தியாலய அதிபரும்ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு.இ.சரவணன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை சிலாவத்தை தமிழ் வித்தியாலஅதிபர் திரு.திருக்குமரன் வழங்கினார்.

ஆசியுரையினை முதன்மை விருந்தினர் திரு.ச.வே. பாலசிங்கம் வழங்கினார். வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை திருமதி ம.பாலசிங்கம்(ஓய்வுபெற்ற அதிபர்) வழங்கி கௌரவித்தார்.

போட்டியில் 245புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினை முல்லைத்தீவு ம.வி.யும், 237புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினை வித்தியானந்தாக் கல்லூரியும், மூன்றாம்இடத்தினை 179புள்ளிகளைப் பெற்றுகொக்குளாய் அ.த.க.பாடசாலையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (23)

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சோறன் பற்றுப் பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கருணசேகரம் என்பவரது தேசிய அடையாள அட்டை (721165078V) கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் அதிகளவு வெங்காய விளைச்சல்

(அலுவலகச்செய்தியாளர்)

தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் மேற்கொள்ளப்பெற்றுவரும் வெங்காயச் செய்கையின் மூலம் வெங்காயச் செய்கையில் பெரு விளைச்சலைப் பெறக் கூடியதாகவுள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் மேற்படிவெங்காயச்செய்கையின் மூலம் விவசாயியொருவர் பெரும் விளைச்சலைப் பெற்று பயன் பெற்றுள்ளமையினை நேரில் அவதானிக்ககூடியதாகவுள்ளது.

இம் முன்மாதிரிச் செய்கையினை ஊக்குவிக்கும் வகையில் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தினர் கிளி/முல்லை/மன்னார் மாவட்ட விவசாயிகளை மேற்படி பகுதிக்கு நேற்று அழைத்து சென்று வெங்காயச் செய்கை குறித்து விளக்கமளித்துள்ளனர்.

மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 35ற்கும்மேற்பட்ட விவசாயிகள் மேற்படி நிறுவனத்தினரால் நெடுங்கேணிப் பகுதிக்கு அழைத்து சென்று வெங்காயச் செய்கை குறித்தும் விளக்கமளிக்கப்பெற்றதுடன் தூவல் நீர்ப்பாசன செய்கையின் மூலம் பெறப்பட்ட கூடுதலான விளைச்சலினை நேரில் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நினைவுதினம் அனுஷ்டிப்பு

சிறிலங்கா பொலிஸ் படை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை உயிரிழந்த பொலிசார் நேற்று நினைவுகூரப்பட்டனர்.

இதன் பிரதான நிகழ்வு பம்பலப்பிட்டி பொலிஸ்மைதானத்தில் நடைபெற்றது. பொலிஸ்மா அதிபர் இந்திரடி சிலவாஇதில் கலந்துகொண்டார்.

1864ஆம் ஆண்டு மாசிமாதம் 21ஆம் திகதி உத்துவின் கந்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் முதலாவது பொலிஸ் உறுப்பினர் உயிரிழந்தார்.

# துணுக்காய் வலயப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள்

(மல்லாவி)

2004ஆம் ஆண்டுக்கான துணுக்காய் வலயத்திற்கு உட்பட்ட உடற்பயிற்சிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மாங்குளம் மகாவித்தியாலயத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

ஆண்கள் அணியில் மு/யோகபுரம் மகாவித்தியாலயம் 1ஆம் இடத்தையும் 2ஆம் இடத்தை முத்தையன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலையும் 3ஆம் இடத்தை முத்தையன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலையும் ஆண்கள் அணியும் பெற்றன. பெண்கள் அணியில் 1ஆம் இடத்தைத் முத்தையன் கட்டு இடது கரை அ.த.க பாடசாலை, 2 ஆம் இடத்தை யோகபுரம் மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தை கற்சிலை மடு அ.த.க பாடசாலையும் பெற்றன. (24)

# ஒரு மில்லியனுக்கும் அதிக கண்ணிவெடிகள் வடக்கு-கிழக்கில் புதையுண்டுள்ளதாக மதிப்பீடு!

## -குடாநாட்டிலே அதிகளவில் புதைப்பு

(வடமராட்சி)

**வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுமார் ஒரு மில்லியன் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாமென தாம் மதிப்பீடு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு அலுவலகத்தின் இணைப்பதிகாரி எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார்.**

மேலும் அவற்றில் கூடுதலானவை யாழ்.குடாநாட்டினுள்ளேயே புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் 1995ஆம் ஆண்டு முதல் தற்போது வரையான காலப் பகுதியினுள் குடாநாட்டினுள் 652 மிதிவெடி விபத்துச்சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்த அவர், அவற்றில் உயிரிழப்புச் சம்பவங்களாகவும் அமைந்திருந்ததாகவும் கருத்து வெளியிட்டார்.

குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றல் பணிகளை விளக்குவது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடொன்று யாழ்.செயலகத்தில் இயங்கிவரும் மாவட்ட கண்ணிவெடியகற்றல் செயற்பாட்டு அலுவலகத்தில் கடந்த வியாழன் இடம்பெற்றது.

சிறிலங்கா இராணுவம் குடாநாட்டினுள் தம்மால் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதிகள் எனத் தெரிவிக்கப்படும் 3,000பிரதேச வரைபடங்களை சமர்ப்பிப்பதாகவும் ஆயினும் பொதுமக்களது முக்கிய பண்பாட்டுப் பகுதிகளான பாடசாலைகள், சந்தைகள், பொது இடங்கள் மற்றும் குடியிருப்புகள் என்பவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டே தற்போது கண்ணிவெடியகற்றல் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.

தற்போதைய சமாதான சூழல் தொடர்ந்தும் நீடித்தும் சர்வதேச சமூகத்தின் நிதியுதவிகள் கிடைக்கப் பெறுமிடத்து எதிர்வரும் 2006ஆம்ஆண்டின் இறுதியினுள் குடாநாட்டினுள் புதையுண்டுள்ள ஆட்களுக்கெதிரான கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளை முற்றாக அகற்றிவிட முடியுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (27)

## வெட்டுப் புள்ளிகள் மாத இறுதியில் வரும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் இம்மாத இறுதியில் வெளியாகும் என்று பரீட்சை திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் 4 ஆயிரத்து 250 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியுள்ளார்கள்.

## 24,25ம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான தபால்மூலதேர்தல் வாக்களிப்புக்கள் எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதற்கென நாடளாவிய ரீதியில் 3500 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன அரசாங்க ஊழியர்கள் தமது திணைக்கள தலைவர்களின் முன்னால் வாக்கு கள் செலுத்தவுள்ளனர். இந்த முறை தபால் மூலவாக்களிப் போரின தொகை 2லட்சத்து 86 ஆயிரத்து 604 என அறிவிக்கப் பட்டுள்ளது இது கடந்த தேர்தலை காட்டிலும் அதிகமான வாக்குகளாகும்.(32)

## ஐ.ம.சு.மு.தேர்தல் அலுவலகங்கள் பல மாத்தறையில் தாக்கப்பட்டன!

### ஜே.வி.பி. குற்றம்சாட்டுகிறது

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்திலுள்ள 35 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தேர்தல் அலுவலகங்கள் மீது ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது. இதில் மாத்தறை முன்னாள் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஜிதாச கித்துல்கொடவின் காரியாலயமும் ஒன்று எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் அமைச்சர் திசாநாயக்க செயற்பட்டுள்ளார் என ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

## வேகமாக வந்த உந்துருளி வீதி வளைவில் விபத்தில் சிக்கியது!

(வட்டக்கச்சி)

வேகமாக வந்த உந்துருளி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் பாதிப்புக்குள்ளாகினர். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் வட்டக்கச்சி பிரதான வீதியில் இடம்பெற்றது.

பயண அனுமதி வழங்கும் செயலகம் முன்பாகவுள்ள வீதியில் வளைவில் ஒன்றையொன்று முந்தும் வகையில் மிக வேகமாக வந்த இரு உந்துருளிகளில் ஒன்று விபத்தில் ' சிக்கியது. இதனால் இதனை ஓட்டி வந்தவர் சிறுகாயங்களுக்குள்ளானார். உந்துருளியில் வந்த மற்றையவர் உடலில் நோ, பாதிப்புக்குள்ளாகி கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (12)

## அரச வாகனங்களை மீளப்பெற உத்தரவு!

அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் வேலைகளுக்காக அரச நிறுவனங்களின் வாகனங்கள் பாவிக்கப்படுவதாக தமக்கு தகவல்கள் வந்துள்ளதென சனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆகவே இந்த வாகனங்கள் அனைத்தையும் மீளப் பெறுமாறு சனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தமக்கு அறிவிக்குமாறு பொலிஸ்மா அதிபரை சனாதிபதி பணித்துள்ளார்.

## நீர் வரி இடாப்பு புதுப்பித்தல்

இரணைமடு குளத்துக்குட்பட்ட முரசுமோட்டை, ஊரியான் திட்டக் குழுப் பிரிவுகளில்உள்ள விவசாயிகளிடம் இருந்து நீர்வரி இடாப்பு புதுப்பிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. முடிவுத்திகதி 26.03.2004 ஆகும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும் விண்ணப்பதாரர்கள் உரிமையை உறுதிப் படுத்தும் ஆவணங்கள், கமநலசேவை நிலையத்தில் ஏக்கர்வரி செலுத்திய பற்றுச்சீட்டு, காணிவரைபடம் போன்றவற்றின் நிழல்ப் பிரதிகளுடன் விண்ணப்பிக்குமாறும், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப் பங்கள் ஏப்ரல் மாதம் 10,11ஆம் திகதிகளில் விசாரணைகள் நடைபெற்று பூர்த்தி செய்யப்படும் என காணி உத்தியோகத்தர் நா.நமசிவாயம் அறிவித்துள்ளார் (14)

## சிறி சுப்பிரமணிய வித்தியாலய பரிசளிப்பு விழா

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாலய பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் கடந்த 17ம் திகதி நடைபெற்றது.

மங்கல விளக்கினை முதன்மை விருந்தினர்கள் ஏற்றி வைக்க, தமிழீழதேசியக் கொடியினை முல்லை. மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற சிறப்புக் கருத்துரைகளை பெற்றோர் சார்பில் கிராம அலுவலர் கனகசுந்தரசுவாமி, முல்லை. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் யோபுரட்சி, முதன்மை விருந்தினர் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி ஜி.எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் வழங்கினார்கள்.

சிறப்பான பாடங்களில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விளையாட்டுப்போட்டியில் மாகாணமட்ட போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள், மாகாணமட்ட இசை, நடன நாடகப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி தேறிய மாணவர்கள் ஆகியோர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினரான திருமதி. ஜி.எஸ். பரமேஸ்வரன் வழங்கிக் கௌரவித்தார். நன்றியுரையினை பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் தசரதன் வழங்கினார்.

இறுதியாக வடமோடி நாட்டுக் கூத்தான இராவணேஸ்வரன் நாடகமும், தென்மோடி நாட்டுக் கூத்தான கோவலன் கூத்தும் பாடசாலை மாணவர்களினால் நடிக்கப்பட்ட இந்த நாடகங்கள் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், காவல்த் துறையினர், போராளிகள், நலன்விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

## அரச வங்கிகளில் விவசாய கடன்பெற்றோருக்கு-

# மீளச்செலுத்தும் கால எல்லை நீடிப்பு வட்டி வீதம் அரைவாசியாக குறைக்க முடிவு

(கொழும்பு)

விவசாயிகள் அரச வங்கிகளில் இருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்த அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கால எல்லை மேலும் ஐந்து மடங்காக அதிகரிப்பதுடன், அவர்களுக்கான வட்டிவீதத்தைஎட்டு வீதத்திலிருந்து நான்கு வீதமாக குறைப்பது என்று அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இதனை வெள்ளிக்கிழமை அரசாங்கப் பேச்சாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கென்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் தொடர்ந்து பேசிய அவர், தனிநபர் ஒருவரின் நலனைப் பாதுகாக்க அரசியலமைப்பு சட்டத்தை திருத்தியமைக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முனைகின்றது என்று குற்றம் சாட்டிய அவர் நாட்டின் எதிர்கால நலன்கருதியே அரசியலமைப்பு சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## காரைநகர் கடற்பரப்பில் இரவு வேளையில் சிறிலங்கா கடற்படையினர் தீவிரபயிற்சி

### கடற்கண்காணிப்பும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்),

யாழ். காரைநகர் கடற்பரப்பில் இரவு நேரங்களில் சிறிலங்கா கடற்படையினர் தீவிர சூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதுடன் இரவு நேரக் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் இந்த, நடவடிக்கைகளினால் இப்பகுதிக் கடற் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றார்கள். அத்துடன் இரவு நேரங்களில் இடம்பெறும் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகளால் இப்பகுதி மக்களிடையே பெரும பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. (32)

## புனரமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

கிளி. தர்மக்கேணி அ.த.க. பாடசாலை மீள்திருத்தக் கட்டடம் அண்மையில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப. அரியரட்ணத்தால் திறந்துவைக்கப்பட்டது.

பாஜ் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனமான பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினால் இக்கட்டடத் தொகுதி புனரமைப்புச் செய்யப்பெற்றது. திருமதி யோ. பாலேந்திரா அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் , தர்மக்கேணி கிராம அலுவலர் புவனராசா, பளைக் கல்விக்கோட்ட பணிப்பாளர் அ .கயிலாயபிள்ளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியைகள், நலன்விரும்பிகள் மற்றும் இப்பாடசாலையின் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## உணவு நஞ்சானதால் 32 மாணவர் பாதிப்பு

(கொழும்பு)

வயம்பா பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய வளாகத்தைச் சேர்ந்த 32மாணவர்கள் உணவு நஞ்சானதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேற்று பகல் உணவு விடுதியிலேயே இந்த மாணவர்கள் உணவு அருந்தினர் என்றும், அதனால்தான் பாதிக்கப்பட்டனர் என்றும் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறியுள்ளார். இதனையடுத்துவளாக உணவு விடுதி மூடப்பட்டுள்ளது. உணவு மாதிரிகள் அரச பகுப்பாய்வு அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## சிற்றூர்தியில் கொள்ளை!

(மட்டக்களப்பு)

கொழும்பில் இருந்து அக்கரைப் பற்றுக்குச் சென்றுகொண்டிருந்த தனியார் சிற்றூர்தி ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை எப்பிலிப்பிட்டிய பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏழு பேர் அடங்கிய ஆயுதக் குழுவொன்று இந்த சம்பவத்தின் போது மூன்று இலட்சம் ரூபா வைப் பயணிகளிடமிருந்து கொள்ளையிட்டுள்ளது.




S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ்

கிளி.நகரில்

S.J.S லேணஸ்

எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி/நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்பட்டு அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

S.J.S லேணஸ்

தொடர்புக்கு:- S.J.S லேணஸ், பிரதான வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- ஆயப்பகுதி நகுவப்பணிமனை முன்பாக

நிர்வாகம் S.J.S லேணஸ்.

(4312)

S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ் S.J.S லேணஸ்

**சிந்தனைக்கு**



சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயலால் தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-03-2004

## சந்திரிகாவின் நம்பிக்கை

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் இயக்கம் விருப்பம் தெரிவித்து தமக்குச் செய்தி அனுப்பியுள்ளது."

"தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாராகவுள்ளேன்."

கடந்த சில நாட்களாகச் சனாதிபதி சந்திரிகாவின் பேச்சுக்களில் இத்தகைய விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் என்னுடன் பேசுவதில் விருப்பம் கொண்டுள்ளது. விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு நானும் தயாராகவுள்ளேன் எனச் சனாதிபதி சந்திரிகா மக்களிடம் வலியுறுத்திக் கூறமுற்பட்டுள்ளதன் வெளிப்பாடே இதுவாகும்.

இதில் முதலில் சனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்த தாம் விருப்பம் கொண்டுள்ளதாக புலிகள் கூறியதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்தமைக்குப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இது உண்மைக்கு மாறானதென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறினார். அதேவேளை சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்களை மக்களும் நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை.

ஆனால், இத்தகையதொரு தேவை-அதாவது பொய் கூறவேண்டிய அவசியம் சனாதிபதி சந்திரிகாவிற்கு ஏன் ஏற்பட்டது என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அதிலும் குறிப்பாக அவரும், அவரது கூட்டாளிகளும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கை குறித்து இடைக்கிடை விமர்சித்துவரும் நிலையில் இத்தகைய தேவை ஏன் எழுந்தது?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பறித்த போது இதற்கான காரணமாகக் கூறிக்கொண்டதானது ரணில் அரசாங்கத்தின் நடவடிக்கையானது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக வுள்ளது என்பதே ஆகும். அதாவது பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அளவிற்கு மீறி விடுதலைப்புலிகளுக்கு விட்டுக்கொடுப்புச் செய்துவிட்டார் என்பதே.

ஆனால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு இன்று தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற்குக் குந்தகம் இழைக்கப்பட்டதாகக் கூறும் அக்குற்றச்சாட்டை சுமத்தித் தேர்தல் வாக்கு வேட்டையில் இறங்குவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத்தயாராக இருப்பதாகவே தெரிவிக்கும் நிலையில் உள்ளார். ஏனெனில், ஐ.தே.முன்னணி அரசாங்கம் முன்னெடுத்த சமாதான முயற்சிகளை மக்கள் வரவேற்பதோடு, அவை தொடரப்படவேண்டும் என்பதையே விரும்புகின்றனர்.

இதேவேளை தான், சமாதான முயற்சிகள் குறித்து எத்தகைய வாக்குறுதிகள் அளித்தாலும் மக்கள் அதில் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள் என்ற சந்தேகமும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உள்ளது. அவர் அவ்வாறு எண்ணுவதற்கும் காரணமும் இல்லாமல் இல்லை. அதாவது கடந்த காலத்தில் சமாதானத்தின் பெயரால் தான் நடத்திய யுத்தம், தற்பொழுது யுத்தத்தினை ஆதரிக்கும் சக்திகளுடனான தேர்தல் கூட்டு என்பன இத்தகைய நிலைக்குக் காரணமாகும்.

இந்நிலையில்தான் சனாதிபதி சந்திரிகா, சமாதானப் பேச்சுவார்த்தை மீதான நம்பகத் தன்மையை ஊட்டும் வகையிலான பேச்சுக்களை மேற்கொள்ள முற்பட்டுள்ளார். அத்தோடு தாமும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முழு அளவில் தயாராக இருப்பதாகவும் காட்டிக்கொள்ள முனைந்து வருகின்றார். இதன்வெளிப்பாடே கருணா தொடர்புகொள்ள முற்பட்டதைதான் நிராகரித்ததாகவும், விடுதலைப்புலிகளுடன் தமக்குத் தொடர்புள்ளதாகக் காட்டிக்கொள்ளவும் விடுதலைப்புலிகள் தம்முடன் பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், விடுதலைப்புலி களின் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்தத் தான் தயாராக உள்ளதாகவும் சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்.

ஆனால், சனாதிபதியின் இத்தகைய யுக்தி எந்தளவிற்கு அவருக்கு நன்மையளிக்கும் என்பது கேள்விக்குரிய தொன்றே. ஏனெனில், உண்மைக்கு மாறான அவரின் கூற்றுக்கள் விரைவிலேயே அடிபட்டுப்போகலாம். அத்தோடு சனாதிபதி சந்திரிகா உண்மைக்கு மாறாகப் பேசுகின்றார் என வெளியாகும் தகவல்கள் அவரின் மீதான நம்பிக்கையை மேலும் சிதைவடையச் செய்வதாகவே இருக்கும். ஏற்கனவே அவநம்பிக்கைக்குரியவராக இனங்காணப்படும் சனாதிபதிக்கு இது அவப் பெயரை தேடிக்கொடுப்பதாகவே இருக்கும்.

சனாதிபதி சந்திரிகா ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எதையும் பேசுவதற்கும் செய்வதற்கும் தயாராகவே உள்ளார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால், சனாதிபதி தனது தரப்பிலிருந்து எதைக்கூறினாலும் அவரது செயற்பாட்டின் அடிப்படையிலேயே அது குறித்த தீர்மானத்திற்கு வர முடியும். ஆனால், மற்றொரு தரப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்தை சனாதிபதி தனது இஸ்டத்திற்கு கூறுவாரேயானால் மற்றத்தரப்பு உண்மையைக்கூறும்போது சனாதிபதியின் பொய்கள் அம்பலமாவது, தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும். அத்தகையதொரு சூழ்நிலையே தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

# சனாதிபதி சர்வதிகாரியாகி சனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்க முயல்கின்றார்

### -முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன

(கொழும்பு)

நாட்டின் சர்வதிகாரியாகி சனநாயகத்தை குழி தோண்டிப் புதைப பதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சிக்கின்றார் என சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.

இம்முறை நடக்க இருக்கும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 120 ஆசனங்களைக் கைப்பற்றுவதுடன் தமிழ் சிறுபான்மைக் கட்சியுடன் இணைந்து மொத்தமாக 150 ஆசனங்களைப் பெற்று மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசை ஆட்சிபீடம் ஏற்றுவோம் அதன பின்னர் சனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டுவந்து அவரை நிரந்தரமாக வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்.

இரண்டு வருடங்கள் நாட்டில் ஏற்படுத்திய சமாதானம், வெளி நாட்டு நிதியுதவிகள் யாவும் சனாதிபதியின் இச்செயலினால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் தீர்மானங்கள எடுத்தால் அதை வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றார். அதை குப்பைத் தொட்டியில் போட்டு விடுகின்றார். தேர்தல் மேடைகளில் பொய்களை மக்களுக்குக் கூறி பிரச்சாரங்களைச் செய்கின்றார்.

இந்த நாட்டின் சர்வதிகாரியாகி சனநாயகத்தை குழி தோண்டி மூடுவதற்கு சகல முயற்சிகளும் செய்துவருகின்றார். ஜே.வி.பி. யினர் இந்த நாட்டில் செய்த அட்டூழியங்களை மக்கள் மறக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# 44லட்சம் தென்பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பது யாருக்கு என்பதில் முடிவில்லை!

### -'ராவய' சிங்களப் பத்திரிகை கூறுகின்றது

தென்னிலங்கையில் 34.6 வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பதை தீர்மானிக்காதிருப்பதாக ராவய தெரிவித்துள்ளது. அந்த வீதம் வாக்களிப்போரில் ஏறத்தாழ 44லட்சம் பேர் ஆகும் அதேவேளை ஐ.தே.முன்னணிக்கு 31.5 வீதத்தினரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கு 37.8 வீதத்தினரும், ஆதரவளிப்பதாகவும் கருத்துக் கணிப்பு தெரிவிக்கின்றது என ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

அக்கணிப்பின்படி நாட்டை சிறந்த முறையில் நிர்வாகம் செய்பவர் என்ற வகையில் சந்திரிகாவுக்கு 34 வீதமும், ரணிலுக்கு 29 வீதமும் இருவரின் நிர்வாகத்திலும் குறை காண்பவர்களின் வீதம் 23 எனவும் குறிப்பிடப்படுகிறது.

இந்தவகையில் தேர்தலை நடத்துவதற்கு ஆதரவாக 48.7 வீதமானோரும், எதிர்ப்பு தெரிவிப்போர் 34.1 வீதமாகவும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பாக 49.3 வீதத்தினர் ஆதரவும், 40.5 வீதமானோர் எதிர்ப்பும் தெரிவிதுள்ளதாக மேற்படி ராவய செய்தி வெளியிட்டுள்ளது.

# பாதுகாப்பு ஆலோசனைகளை புறம்தள்ளி சனாதிபதி,பிரதமர் சூறாவளிப் பிரச்சாரம்!

### –பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் விசனம்

(கொழும்பு)

அரசியல் வாதிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சரியான பாதுகாப்பின்றி தேர்தல் கூட்டங்களில் பகிரங்கமாக கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு பாதுகாப்புப் பிரிவினர் ஆலோசனை கூறியிருக்கின்ற போதும் அதனை ஒரு பொருட்டாக கருதாமல் சனாதிபதியும், பிரதமரும் சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இவர்கள் இம்முடிவு எடுத்திருப்பது கடந்த கூட்டங்களின் போது இருவருக்கும் சமஅளவு ஆதரவு கிடைப்பதன் விளைவே எனவும் போட்டி மிகவும் தீவிரப் போக்குடையதாகவும், ஒன்றுக்கொன்று குறைவின்றி ஆதரவு கிடைப்பதுமே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பாதுகாப்பு காரணமாக ரத்துச்செய்யப்பட்ட இடங்களுக்கு அவர்கள் பிரச்சாரத்துக்கு செல்ல தீர்மானித்திருப்பதும்? சனாதிபதி மாத்தறை, கம்பகா, குளியாப்பிட்டி போன்ற இடங்களுக்கும், பிரதமர் மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற இடங்களுக்கும் பிரச்சாரத்துக்குச் சென்று திரும்பியமை பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்களை சிந்திக்க வைப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

# அரச ஊடகங்களில் தேர்தல் பிரச்சாரம் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சேபம்

### – 1000 மில்லியன் ரூபா இழப்பீடு ரவி கருணாநாயக்க கோரல்

(கொழும்பு)

சிறிலங்கா ருபவாஹினிக் கூட்டுத்தாபனம் தமக்கு எதிராக பிழையான தகவலை வெளியிட்டமையால் அந்த நிறுவனம் தமக்கு 1000 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்க வேண்டுமென அமைச்சர் ரவி கருணாநாயக்க சட்டத்தரணி மூலமாக அறிவித்துள்ளார்.

இராஜகிரிய பகுதியில் தேர்தல் வன்முறையை தூண்டும் சுவரொட்டிகளை வைத்திருந்ததாக செய்தி வெளியிட்டமை முற்றிலும் தவறானதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் வேட்பாளர் விமல் வீரவன்ச ருபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மண்டபம் ஒன்றில் கட்சி பிரசாரம் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தியமை 17வது அரசியலமைப்புக்கு முரணானது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் சேனரத்கப்புக் கொட்டுவ தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளார் இந்தக் கலந்துரையாடலில் ருபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர், சிறிலங்கா ஒளிபரப்பு கூட்டுத்தாபன தலைவர், உட்பட அரசியல் ஊடகங்களின் தலைவர்கள் பங்கேற்றதாக சேனரத்கப்புக் கொட்டுவ குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான இடமொன்றில் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது குற்றமான செயல் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# கெட்னி வோஷின் சாதனையை 3—வது டெஸ்ரில் முறியடிப்பேன்

### -ஷேன்வோர்ன் அறிவிப்பு

சிறிலங்காவிற்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கெட்னிவோஷின் 519 விக்கெட்டுக்கள் என்ற உலக சாதனையை முறியடிக்கக் கூடியதாக இருக்குமென்று அவுஸ்திரேலியாவின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காலியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிக்கு முன்னர் இந்த நம்பிக்கை தனக்கு இல்லை என்று கூறிய அவர் முதல் இரு டெஸ்ட் போட்டிகளில் இருபது விக்கெட்டுக்களை கைப்பற்றியதன் மூலம் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பன்னிரண்டு மாதகால தடைக்குப் பின்னர் டெஸ்ட் அரங்கில் காலடி எடுத்து வைத்த ஷேன்வோர்ன் அதனால் தனது கிரிக்கெட் வாழ்க்கைக்கு எதுவிதபாதிப்பும் ஏற்படவில்லை என்பதனையும் நிரூபித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்காவிற்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு பெரும் பங்காற்றி உள்ளார்.

இதுவரை 511 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உள்ள ஷேன்வோர்ன் கடைசி டெஸ்ட் போட்டியில் ஒன்பது விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால் பந்து வீச்சில் உலக சாதனையாளராக மாறி விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நிகழ்வுகள்

# யாழ்.குடாநாட்டிலும் எழுச்சிபூர்வமாக ஆரம்பம்

(வடமராட்சி)

இந்தியஅரசிற்கெதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த அன்னை பூபதியின் 16ஆம் ஆண்டு நினைவுதினநிகழ்வுகள் குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக நேற்று முன்தினம் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஒருபுறம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிற்கான பிரச்சார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ள நிலையில் மறுபுறத்தே அன்னை பூபதியின் எழுச்சி தின நிகழ்வுகளும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கோட்ட மட்டத்திலான தமிழீழ எழுச்சிப்பேரவை அலுவலகங்கள் பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றில் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அப்பகுதி அலங்கரிக்கப் பட்டுள்ளது.

அதேபோன்று விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் அனைத்திலும் அன்னை பூபதியினது உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனிடையே அன்னை பூபதியின் நினைவுதின இறுதிநாளன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகளுக்கும் யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (27)

# எனது பிள்ளைகளின் படங்கள் பிரச்சாரத்தில் ஐ.தேசிய முன்னணி மீது சனாதிபதி குற்றச்சாட்டு

## சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவிப்பு

(கொழும்பு)

தனது இரு பிள்ளைகளின் படங்களுடன் தனது படத்தையும் இணைத்து ஐக்கிய தேசிய முன்னணியினர் பிரச்சாரங்கள் செய்து வருகின்றனர். இது தமக்கு பெரும் கவலையாகஉள்ளதெனவும்,இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஒருவரின் படத்தை வெளியிடுவதென்றால் அவரின் அனுமதியையும் பெறவேண்டும் தன்னிடம் அனுமதி பெறாதபடியால் இதுசட்டவிரோதமான செயலாக கருதப்படும் என சனாதிபதி செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# பாதுகாப்புக் காரணங்களால் மக்களைச் சந்திக்க முடியவில்லை

## -சனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

பாதுகாப்புக் காரணங்களால் மக்களோடு அடிக்கடி கலந்துரையாடும் வாய்ப்பு இல்லாது போனதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மக்களைச் சந்திக்க தான் தவறப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

நேற்று கண்டிக்கு விஜயம் செய்த சனாதிபதி சந்திரிகா தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதுடன் அப்பகுதி மக்களையும் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### வீதி புனரமைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி-மாயவனூரில் இருவீதிகள் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

01). கிஸ்ணன் ஆலயம் தொடக்கம் அன்புப்பாலம் வரை

02). கிஸ்ணன் ஆலயம் தொடக்கம் புளுதி ஆற்றுக் குளம் வரை வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இதனைத் தொடர்ந்து, மற்றைய வீதிகளும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதால் அதற்குரிய ஒத்துழைப்பை மக்கள் வழங்க வேண்டும் என்று கிராமசேவையாளர் வேண்டி உள்ளார். (12)

# இந்திய-பாகிஸ்தான் ஒருநாள் போட்டி

# 5விக்கெட்டுக்களால் இந்.அணி வெற்றி

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று லாகூரி நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

பகல்-இரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இன்சமாம்-உல்ஹக் 123 ஓட்டங்களையும், கமீட், யுனுஸ் ஹான் 45,36 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் இர்பான் பதான், பாலாஜி முரளிகார்த்திக், சகிர் கான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும்,டெண்டுல்கர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 294 ஓட்டங்களை பெற்றால் வெற்றியென்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறி கொடுத்து 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முக்கிய நான்கு விக்கெட்டுகளை இழந்தது. இந் நிலையில் நிதானமாக துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த ராகுல்ராவிட்டுடன் இணைந்த முகமட் ஹைப் அதிரடியாக துடுப்பெடுத்தாட இருவரும் இணைந்து 45 ஆவது ஓவர் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் ராவிட், முகமட் ஹப் ஆகியோர் ஆட்டமிழக்காது 76,71 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அக்தார், முகமட்சமி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், அப்துல் ரசாக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இன்சமாம்-உல்ஹக் தெரிவானார்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் 2-2 என்ற நிலையில் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

# கடற்படையினரின் கடும் போக்கால் நீலங்காட்டு மக்கள் தொடர்ந்து அவலம்

காரைநகரில் உள்ள நீலங்காட்டுக்கிராம மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் பெரும் அவலவாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

1990 களில் இப்பகுதிகளைப் படையினர் ஆக்கிரமித்ததனால் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து அங்கு மீளக்குடியேறியுள்ளனர்.

எனினும் மீளக்குடியமரச் சென்றுள்ள மக்களை குடியேறி வாழ்வதற்குரிய வகையில் படையினர் எதுவித விட்டுக்கொடுப்புக்களையும் செய்யாததுடன் தமது பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் புதைத்து வைத்துள்ள மிதிவெடிகளையும் அகற்றுவதற்கு அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதனால் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாத இப்பகுதி மக்கள், விடுவிக்கப்பட்ட குறுகிய நிலப்பரப்பிலேயே தற்காலிக குடில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு சீரான குடிநீர் மற்றும் மலசல கூடவசதிகளைச் செய்து கொடுக்க யாரும் முன்வராததனால் இங்கு குடியமர்ந்துள்ள 150குடும்பங்களைச் சேர்ந்த 650ற்கும் அதிகமானோர் வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொற்று நோய்களும் இங்கு பரவி வருகின்றது. (33)

# வன்னியில் வீதி புனரமைப்பு ஏ-தர வீதி 48வீதம் பூர்த்தி

(கிளிநொச்சி)

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வன்னியில் ஏ தரவீதிகளும், பி தர வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 206 கி.மீ நீளமுடைய வன்னியின் ஏ தர வீதிகளில் இது வரை 129.5 கி.மீ நீளமான வீதி புனரமைக்கப்பட்டு உள்ளது. இதில் ஏ.9 சாலையில் 66 கி.மீ உம், பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் (ஏ-35) 52 கி.மீ உம், மாங்குளம்-முல்லைத்தீவு வீதி (ஏ-34) இல் 49.25 கி.மீ உம், பூநகரி- மன்னார் வீதி (ஏ.32) யில் 38 கி.மீ உம், புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பி தர வீதிகளில் சோரன் பற்று தாழையடி வீதி(பி-402)யில் 7.4 கி.மீ உம், மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதி (பி-269) யில் 37.8 கி.மீ உம், புனரமைக்கப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு-புளியம்குளம் வீதியும் -முல்லைத்தீவு கொக்குளாய் வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளது. மொத்தமாக வன்னியின் பி தர வீதிகளில் 157 கி.மீ இல் 44 கி.மீ புனரமைக்கப்பட்டுள்ளது, இது வன்னியில் திருத்தப்பட்ட பி தர வீதிகளில் 27 வீதமாகும்.

இவ்வாறாக வன்னியில் ஏ தர, பிதர வீதிகளில் 48 வீத மான வேலைகள் முடிவடைந்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்ட பிரதம பொறியியலாளர் வே.மோகன் அவர்கள் தெரிவித்துள்ளார். (15)

### தேர்தல் வன்முறை 707 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலத்தில் 42 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதுவரை இடம் பெற்றுள்ள தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கை 707 ஆக அதிகரித்துள்ளது.

### புலிகள்..

ஆகியோரும் பங்குபற்றினர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தாமாக முன்வந்து இணைந்த, இவர்கள் உரிய வயதை அடையாத காரணத்தினால் இவர்கள் யுனிசெவ் அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு இதுவரை 205 பேர் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (25)

### அமெரிக்க...

கடந்த 10 வருடங்களாகக் கொடுத்த தொகையை பார்க்கும் போது இம்முறை வழங்கப்பட்டுள்ள நிதி மிகவும் அதிகமாகவுள்ளது.

எமக்குள்ள சந்தேகம் இப்பணம் வேறு விடயங்களுக்கு தவறான முறையில் பயன்படுத்தப்படுமா? என்பதாகும். எனத்தெரிவித்த அவர் இன்றைய சூழ்நிலையில் இங்குள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்கள் பக்கச்சார்பாக நடக்கலாம். இதனால் இவர்கள் இந்தத் தேர்தலை கண்காணிப்பாளர்களாக இருந்து திசை மாறிச்செல்லக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். இவ்வாறான அச்சங்கள் எழுவது நியாயமானதே என்றார். இது சம்பந்தமாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் இணைஒருங்கிணைப்பாளர் பாக்கிய சோதிசரவணமுத்து கருத்துத் தெரிவிக்கையில், அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கள் என்ன என்பது எனக்கு தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் தேர்தல் கண்காணிப்புக்கு கிடைத்து வருகின்ற வெளிநாட்டு உதவி சம்பந்தமாக நான் கூறுவது என்னவெனில் கண்காணிப்பிற்கு நிதியுதவி வழங்கியுள்ள நாடுகள் நிதி வழங்குவது பற்றி பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் தகவல் வெளியிட வேண்டுமெனத் தெளிவாக வுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பிற்கு கடந்த ஆண்டுகளிலும் வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைத்துள்ளன நிதியாக கிடைக்கும் ஒவ்வொரு ரூபாவிற்கும் அதனை பெற்றுக் கொள்கின்ற அமைப்புகள் கணக்கு காட்டவேண்டும்.

இப்படியான நிலையில் அரசியல் கட்சிகளுக்கு இவ் விடயத்தில் என்ன பிரச்சினையென என்னால் புரிந்து கொள்ள முடியாதுள்ளதென அத்துடன் எங்களுடன் கடமையாற்றுபவர்கள் யாரும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையை எந்தவோர் அரசியல் கட்சியின் நலனுக்காகவும் பயன்படுத்துவது இல்லை என்பதனை நான் வலியுறுத்துகிறேன்.

இதில் குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு எந்த ஆதாரமும் இருப்பதாக நான் நம்பவில்லை ஒரு குற்றச்சாட்டை அவர்கள் முன் வைக்கிறார்கள் என்றால் அதற்கான ஆதாரத்தைக் காட்டி அவர்கள் குற்றத்தை நிரூபிக்க வேண்டும். இவை அவர்களின் அரசியல் செயற்பாட்டின் தரத்தை பிரதிபலிக்கின்ற, ஒரு விடயமென்றோ அவர்கள் எந்தளவிற்கு நம்பிக்கை இழந்து போய் ஏதாவது செய்தாக வேண்டும் எனகின்ற நிலையிலிருக்கின்றார்கள் என்பதைக் காட்டும் விடயம் இதுவென்றோ என்னால் ஊகங்களைத்தான் செல்ல முடியும் என்றார் அவர்.

# கிளிநொச்சி புதிய கல்வி நிலையம்

எமது கல்வி நிலையத்தின் 10வது நிறைவை முன்னிட்டு வவுனியா றோயல் கல்வி நிறுவனத்திற்கும் எமது கல்வி நிறுவனத்திற்குமான துடுப்பாட்டப் போட்டி.

இடம்:- கிளி/கனகபுரம் வி.மைதானம்.

காலம்:- 22.03.2004 காலை 9.00.

அனுசரணை:- அமுதசுரபி குளிர்பானநிலையம்
கிளியரசன் சுவையகம்
சிங்கர் சிறமை.

(4.3.3.3) நன்றி நிர்வாகம்.

### நாட்டில்...

இருந்த தேசவிரோதிகள் எல்லோரும் இன்று கருணாவுடன் சேர்ந்து மட்டு. அம்பாறை மக்களை துன்புறுத்துவதிலும் கொடுமைப் படுத்துவதிலும் முன்னின்று செயற்பட்டுக் கொண்டுள்ளனர்.

கருணா தன்னிடம் ஆயிரக்கணக்கான போராளிகள், ஆயுதங்கள் இருப்பதாகக் கூறியுள்ளார். இது எமது மரபிலேயே இல்லாத காட்டிக் கொடுப்பாகும்.

இந்த ஆயுதங்களைச் சேர்ப்பதற்கு தேசத்துக்கும் தேசியத் தலைமைக்கும் பலம் சேர்ப்பதற்கும் எமது தேசியத் தலைவர் பட்ட துன்பங்களும் துயரங்களும் எமது ஒவ்வொரு போராளிக்கும் தெரியும். இந்த பலத்தைச் சிதைப்பதில் கருணா காட்டிவரும் ஆர்வம் எவ்வளவு துரோகமானது.

இன்று சிறிலங்காவில் இருந்து வெளிவருகின்ற சிங்கள இனவாத பத்திரிகைகள், ஊடகங்கள் எப்படி தமிழர் விரோதக் கருத்துக்களை முன்வைக்கின்றார்களோ, தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராகச் செயற்படுகின்றார்களோ அதேபோன்ற செயற்பாடுகளை அவர்களுடன் இணைந்து புலம்பெயர்ந்த நாடுகளிலும் சில ஊடகங்கள் செயற்படுவதாக நாங்கள் அறிகின்றோம். அவர்கள் தான் இதனைச் செய்து வருகின்றனர்.

அதாவது, கருணாவின் செய்திகளை பிரசுரிப்பது முதன்மைப் படுத்தி மக்களின் மனங்களைப் புண்படுத்தி வருகிறது. எனவே, ஒவ்வொரு தமிழனும் கலங்கி நிற்கும் இந்த வேளையில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கருத்துக்களை விதைத்து அதனூடாக நன்மை பெற்றுக் கொண்டிருக்கும் தேசவிரோத ஊடகங்களை புலம்பெயர்ந்த மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

கருணாவின் மோசடிகள் அம்பலத்துக்கு வந்து சரியான தரவுகள் தேசியத் தலைவரிடம் கையளிக்கப்பட்டதன் காரணமாக எமது முக்கிய மூன்று பொறுப்பாளர்களை விலத்துமாறு கேட்டுக் கொண்டார்.

எமது தலைவர் தனிமனித விசுவாசத்தை வெறுப்பவர். அவர் எப்பொழுதும் எமது தேசத்தையும் விடுதலையையும் மக்களையும் நேசிக்கின்ற ஒரு போராளியைத் தான் மிக உயர்வாக நேசிப்பவர். கௌரவிப்பவர். அந்த வகையில் எல்லாப் போராளிகளையும் தன்னுடைய பிள்ளைகள் போன்று வளர்த்தெடுத்தவர். ஒவ்வொரு போராளியும் வீட்டில் வளர்ந்ததைவிட உணர்வான பாசப்பிணைப்பாலும் தேசப்பற்றோடு எங்கள் மக்களை நேசிக்கின்ற உயர்வான பண்போடு வளர்த்தவர் எங்கள் தலைவர்.

எனவே, எமது தேசியத் தலைவரின் காலத்தில் நாங்கள் நிம்மதியான கௌரவமான வாழ்வை பெறுவோம். அதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் நாங்களும் மக்களும் இருக்கின்றோம் எனவும் தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.